**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.27.01.2023**

**2023**ம் ஆண்டு ஜனவரி மாதம் **30.01.2023**ம் தேதி திங்கட்கிழமை மாலை **4.00** மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

- **<u>பொருள் எண்–1:</u>**

**இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(கூ.பொ) அவர்களின் நவம்பர் 2022 மற்றும் டிசம்பர் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.**

**( ந.க.எண்:1103/2020/சி1 )**

**தீர்மான எண் : 178 –** பதிவு செய்யப்பட்டது.

- **<u>பொருள் எண்–2 :</u>**

**இயக்குநர், தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனம் , கோயம்புத்தூர் அவர்களின் கடிதம்** Roc No:276/2021/A2, **நாள்**: 20.10.2022**ன்படி, இந்நகராட்சியால் மேற்படி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ஆண்டு பங்குத்தொகை**, 2020-21**ஆம் ஆண்டிற்கு ரூ**.50,000/- **மற்றும்** 2021-22**ஆம் ஆண்டிற்கு ரூ**.75,000/- **ஆக மொத்தம் ரூ**.1,25,000/-(**ஒரு இலட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்**) **அவசியம் கருதி** 16.11.2022 **அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொது நிதியில் இருந்து தொகை விடுவிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.

**அலுவலகக்குறிப்பு : முன் அனுமதி பெற்று தொகை விடுவிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்**.

**( ந.க.எண்:2336/2019/சி1 )**

**தீர்மான எண் : 179 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

- **<u>பொருள் எண்–3 :</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு எண்.**5**, பிளாக் எண்.**3**, நகரளவு எண்.**145**, **146**இல் அரசு புறம் போக்கு நிலத்திலுள்ள அனுமதியற்ற கட்டிடம் மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு நகர்ஊரமைப்பு சட்டம் **1971** பிரிவு **56&57**-இன்படி தாய் ஸ்தலம் தேவாங்கர் சமூக பொதுமை கட்டிடத்தை பூட்டி சீலிட அறிவிப்புகள் வழங்கியும், அதனை தொடர்ந்து **48** மணி நேர கால அவகாச

இறுதி அறிவிப்பு (**Lock and Seal**) கட்டிடத்தை பூட்டி சீலிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் தாய் ஸ்தலம் தேவாங்கர் சமூக பொதுமை நிர்வாகத்தினர் இந்நகராட்சி மூலம் வழங்கிய அறிவிப்புக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் வழக்கு எண் **W.P.(MD)No. 28269 of 2022**இன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், வாதிடவும் சேர்த்து வாதுரைக் கட்டணமாக ரூ.10,000/– ஐ வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு.கே.பாலசுப்ரமணி அவர்களிடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:406/2018/எப்1)

***தீர்மான எண் :*** **180 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–4:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.30, நகரளவு எண்.4409, சுப்புராஜ் நகரில் தென்னக ரயில்வே மூலம் பொதுமக்கள் நடை பாதை அமைக்கும் பணி மேற்கொள்ள இருந்த நிலையில் அதனைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்பு தாரர்களுக்கு நகராட்சியின் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் திரு. சு.அருணாச்சலம் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நகராட்சி ஆணையாளரை 1ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு இந்நகராட்சிக்கு எதிராக வழக்கு எண் W.P.(MD)No.16758 Of 2022 வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், வாதிடவும் சேர்த்து வாதுரைக் கட்டணமாக ரூ.10,000/-ஐ வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு.ஹேமகார்த்திகேயன், அவர்களிடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.ஹேமகார்த்திகேயன், வழக்கறிஞருக்கு வழங்கவும், செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 1963/2022/எப்1)

**தீர்மான எண் : 181 –** அனுமதிக்கப்பட்டது

- **<u>பொருள் எண்–5:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு எண்.5 பிளாக் எண்.3 நகரளவு எண்.145, 146இல் அரசு புறம் போக்கு நிலத்திலுள்ள அனுமதியற்ற கட்டிடம் மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக இந்நகராட்சிக்கு எதிராகவும், கூடுதல் முதன்மை செயலாளர் அவர்களுக்கு எதிராகவும் மதுரை வழக்கறிஞர் திரு. Dr. மகேஸ் மகாதேவ் அவர்கள் அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ய ரூ.5,000/-மும் பதிலுறை தயார் செய்து அனுப்பிய வகையிலும் மேலும் நகரளவு எண்-146இல் உள்ள இடத்தில் உரிமை மீது தாய்ஸ்தலம் தேவாங்கர் ஜாதி பொதுமை மற்றும் திரு காந்தி என்ற காளியப்பன் என்பவருக்கும் போடிநாயக்கனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.No.84/2014 IN I.A.No.431/2016 வழக்கு நடைபெற்று வருவதால் கட்டிடத்தினை மூடி சீல் வைத்து மேல் நடவடிக்கை தொடர்வது குறித்து சட்டக்கருத்துருக்கு ரூ.5,000/-மும் மொத்தம் ரூ.10,000/- ஐ வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிஞர் திரு.ஹேமகார்த்திகேயன், அவர்களிடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை திரு.ஹேமகார்த்திகேயன், வழக்கறிஞருக்கு வழங்கவும், செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:3111/2022/எப்1)

**தீர்மான எண் : 182 –** அனுமதிக்கப்பட்டது

- **<u>பொருள் எண்–6:</u>**

மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்களின் கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசின் சாதனைகள் அடங்கிய விளம்பர பதாகைகள் நிறுவிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அடிதளத்துடன் (கான்கீரிட்) கூடிய விளம்பரப் பதாகைகள் நிறுவுவதற்கு தேனியில் செயல்பட்டு வரும் மூசா டிஜிட்டல் ப்ளக்ஸ், நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசின் சாதனைகள் அடங்கிய விளம்பர பதாகைகள் இந்நகராட்சி பகுதியில் பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களில் 3 எண்ணம் வைக்க ஆகும் செலவினம் ரூ. 41,000/-ஐ மூசா டிஜிட்டல் ப்ளக்ஸ், தேனி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 0043/2023/எப்1)

**தீர்மான எண் : 183 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–7:</u>**

**போடிநாயக்கனூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி, பொது சுகாதாரப்பிரிவுகளில் சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த கீழ்க்கண்ட விவரப்படியுள்ள மிகவும் பழுதடைந்து அவற்றை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள** 1.**தள்ளுவண்டிகள் –** 50 **எண்ணிக்கை**, 2, **காம்பாக்டர் பின் –** 36 **எண்ணிக்கை** ,3.**டம்பர் பின் –** 18 **எண்ணிக்கையினை கழிவடை செய்து பொது ஏலத்தில் விட, மேற்காணும் பொருட்களை கழிவு செய்ய** 15.12.2022 **ஆம் தேதி பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்வி கோரப்பட்டுள்ளது.**

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஏலக்கேள்வி கோரிய தொகை இரும்பு கிலோ ஒன்றுக்கு ரூ. | ஏலக்கேள்வி கோரிய தொகை தகரம் கிலோ ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | Jeyam Equiment Engineering, 39/91,Nehru Nagar, Dharapuram | 27/- | 17/- |
| 2 | Una's Rickshaw, 46/97, Nehru Nagar, Dharapuram | 26/- | 16/- |

**அலுவலகக்குறிப்பு** :– **மேற்படி வரிசை எண்.** 1**ல் குறிப்பிட்டுள்ள** Jeyam Equiment Engineering, Dharapuram நிறுவனம் ( இரும்பு கிலோ ஒன்றுக்கு ரூ. 27/- தகரம் கிலோ ஒன்றுக்கு ரூ.17/-) என உயர்ந்த பட்ச ஏல தொகை கோரியுள்ளார். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.**1501 /2022 /**இ**1**)**

**தீர்மான எண் : 184 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–8:</u>**

**போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியாகம் செய்யும் பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவதால், பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து குடிநீர் விநியாகம் செய்வதற்கு ஒராண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள , அதற்கான உத்தேச செலவினம் ரூ.**8.00/– **இலட்சத்தினை நகராட்சி குடிநீர்வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு** :– **அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.** 3834 /2022/**இ**1)

**தீர்மான எண் : 185 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–9:</u>**

**போடிநாயக்கனூர் நகராட்சி நுண் உரக்குடில்களில் சானிட்டரி க�ிவுகளை எரித்து அப்புறப்படுத்த எரிப்பான்**(Incinirator) –1 எண்ணம் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.50/– இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3727 /2022/இ1)

**தீர்மான எண் : 186 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–10:</u>**

**இந்நகராட்சிக்குட்பட்ட நான்கு திசைகளிலும் உள்ள எல்லை பகுதிகளில் வரவேற்பு பலகை வைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**60,000/–**யினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு: **அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.** 3798/2022/**இ**1)

**தீர்மான எண் : 187 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–11:</u>**

**சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத்திட்டம்** 2022-23**ன் கீழ்**, **நிர்வாக அனுமதி வ�ங்கப்பட்ட பணிகளுக்கு** 30.12.2022**ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளித�ில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும் நிறுவனங்களுக்கு விளம்பர கட்டணம் வ�ங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.

| வ.எண் | நிறுவனம் | தொகை.ரூ |
|---|---|---|
| 1 | மதுரை மணி | ரூ.**14,700/–** |
| 2 | உள்ளாட்சி சாரல் | ரூ.**12,600/–** |
| | மொத்தம் | ரூ.**27,300/–** |

அலுவலகக்குறிப்பு: **அனுமதிக்கலாம்**

(**ந.க.எண்**. 3393/2022/**இ**1)

**தீர்மான எண் : 188 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–12:</u>**

**நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களால் நடத்தப்படும்**

**காணொளி ஆய்வுக்கூட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும்** BSNL optical Network connection பழுதடைந்து விட்டால், காணொளி ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள மாற்று Network Connection(Unlimited data with mbps speed) கூடுதலாக ஆணையர் அறையில் பொருத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,000/-னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3724 /2022/இ1)

**தீர்மான எண் : 189 –** அனுமதிக்கப்பட்டது

- **பொருள் எண்–13:**

**போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்**–6, **அம்மாகுளம் சிறுவர் விளையாட்டு பூங்காவில் உள்ள வண்ணவிளக்குகள் மற்றும் வயரிங் கேபிள்கள் பழுதாகி உள்ளதால் அதனை சரிசெய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.**20,000/–**னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு: **அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.** 0113/2023/**இ**1)

**தீர்மான எண் : 190 –** அனுமதிக்கப்பட்டது

- **பொருள் எண்–14:**

**நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்**–21626/2022/**டிபி**–2,**நாள்**.22.12.2022**ல் நகராட்சி பொறுப்பிலுள்ள பாழடைந்த கட்டிடங்களை இடிப்பதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கி ஆணையிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு: **பதிவு செய்யலாம்**

**(ந.க.எண்.** 3832/2022/**இ**1)

**தீர்மான எண் : 191 –** அனுமதிக்கப்பட்டது

- **பொருள் எண்–15:**

**இந்நகராட்சியில் இயங்கிவரும்** TN60Q-5418 **ஆணையாளர் ஈப்பு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற** Automative Manufacturers Pvt Ltd,Theni **நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**98,702/–**னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு: **அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.** 0112/2023/**இ**1)

**தீர்மான எண் : 192 –** அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–16:**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொது நிதி 2022-23 மற்றும் குடிநீர் வடிகால் நிதி 2022-23ன் கீழ், மேற்கொள்ளபடும் பணிகளுக்கு 30.12.2022ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிற்பகல் தமிழ் நாளிதழ்,கோயமுத்தூர் நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் ரூ.14,700/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : அனுமதிக்கலாம்

(ந.க.எண். 3274/2022/இ1)

**தீர்மான எண் : 193 –** அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–17:**

**போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு, நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி 03.01.2023ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை .ரூ |
|---|---|---|---|---|
| 1 | நகர்மன்ற கூட்டத்தில் நான்கு புறமும் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு வருகை பதிவேடு(Bio-metric) சாதனம் 7 எண்ணம் பொருத்தும் பணி | ரூ.2,50,000/– | Sigaram Media & Networks, Cumbum | **2,16,792/–** |
| | | | The Point Soft infotech & computers, Cumbum | **2,18,569/–** |

**அலுவலகக்குறிப்பு**: **வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வ ங்கியுள்ள** Sigaram Media & Networks,Cumbum நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3725 /2022/இ1)

**தீர்மான எண் : 194 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–18:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் 9 கட்டிடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 03.01.2023ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த புள்ளி தொகை .ரூ |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான பசுமை நுண்உரக்குடில் ,மின்சாரவாரியம் பின்புறம் உள்ள பொதுசுகாதாரபிரிவு(1) கட்டிடம், சுப்புராஜ் நகர் பொதுசுகாதார பிரிவு(5) கட்டிடம், அண்ணா பள்ளியில் உள்ள பொதுசுகாதார பிரிவு(2) கட்டிடம், LCV Shelter, ஜமீன்தோப்பு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், பயணியர் தங்கும் விடுதி, தென்றல்நகர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வணிகவளாகம் ஆகிய கட்டிடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி | ரூ.8,60,000/– | Sigaram Media & Networks, Cumbum | 8,57,190/– |
| | | | The Point Soft infotech & computers, Cumbum | 8,58,178/– |

**அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வ ங்கியுள்ள** Sigaram Media & Networks,Cumbum நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3726 /2022/இ1)

**தீர்மான எண் : 195 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–19:</u>**

**போடிநாயக்கனூர் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு** 03.01.2023**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.**

| வ. எ ண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட் டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–5, மேற்கு ராஜ வீதியில் புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணி | ரூ.2,50,000/– | எஸ்.வேலுச்சாமி , ஒப்பந்தகாரர், ஆண்டிபட்டி | 0.35% மதிப்பீட் டை விட குறைவு |
| | | | எல்.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடி | 97.97 % மதிப்பீட் டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு** :

**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வ ங்கியுள்ள** எஸ்.வேலுச்சாமி, **ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வ ங்கவும் , பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வ ங்கலாம்**.

**(ந.க.எண்.** 3334 /2022/**இ**1)

**தீர்மான எண் : 196 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–20:</u>**

திட்ட இயக்குநர் ,மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை, தேனி அவர்களின் கடிதங்கள் ந.க.எண்.3796/2022/தி6, நாள். 06.12.2022 மற்றும் 13.12.2022ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2022–23 ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட கீழ்காணும் பணிகளில்,

| **வ.எண்** | **வார்டு எண் மற்றும் தெருவின் பெயர்** | **கட்டப்படும் கட்டிடத்தின் விபரம்** | **அவ்விடத்தில் பழுதடைந்து இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விபரம்** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | வார்டு எண் 23-இல் மருது பாண்டியர் தெரு | பொது விநியோகக் கடை | பொதுகழிப்பிடம் |
| 2 | வார்டு எண் 7-இல் டி.வி.கே.நகர் தெரு எண் 2 | அங்கன்வாடி மையம் | அங்கன்வாடி மையம் |
| 3 | வார்டு எண் 14-இல் சின்னசௌடம்மன் கோவில் | அங்கன்வாடி மையம | அங்கன்வாடி மையம |

| | | | |
|---|---|---|---|
| | தெரு | | |

மேற்காணும் களம்(4)ல் உள்ள பழைய பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும், தலைமை பொறியாளர், சென்னை அவர்கள் ஆய்வு செய்து கட்டிடத்தினை இடிக்க அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கருத்துரு சமர்ப்பித்தது மன்றத்தின் **அனுமதி**க்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0011 /2023/இ1)

**தீர்மான எண் : 197 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–21:</u>**

**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்**.23124/**ஆர்**-1/2022/- **நாள்**: 23.09.2022**ல் திரு**.**இராதாகிருஷ்ணன் பார்த்திபன் அவர்களின் "இரவின் நி ல்" திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்களிப்பது தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் கேளிக்கை வரி சட்டத்தின்**(Tamil Nadu Entertaiment Tax Act.2017) பிரிவு 11 (1)ன் படி நகர்மன்ற தீர்மான முடிவுகளை அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்.2375/2022/அ2 நாள்.19.10.2022ம் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

(**ந**.**க**.**எண்**.3453/2017/**அ**1)

**தீர்மான எண் : 198 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–22:</u>**

**இந்நகராட்சிக்கு கீழ்க்காணும் விபரப்படியாக தேவையான எழுதுபொருட்கள் அவசர அவசியம் கருதி பெறப்பட்டது.**

| வ எண் | எழுதுபொருட்கள் விபரம் | எண்ணிக்கை | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | ஏ 4 சைஸ் பேப்பர் | 150 ரீம் | 58,500/– |
| 2 | கோப்பு மூடுதாள் | 1000 எண்ணம் | 7,000/– |
| 3 | அலுவலக கவர் பெரியது | 1000 எண்ணம் | 3,000/– |
| 4 | அலுவலக கவர் சிறியது | 1000 எண்ணம் | 2,500/– |
| 5 | கணிணி வரி ரசீதுகள் | 50,000 எண்ணம் | 1,92,500/– |
| | | மொத்தம் | 263500/– |
| | | மத்திய அரசு சேவை வரி(18%) | 36,900/– |
| | | மாநில அரசு சேவை வரி(1%) | 7020/– |
| | | நிகர மொத்தம் | 3,07,420/– |

**மேற்காணும் விபரப்படியான பொருட்களை அரசு அங்கிகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டிபர்போஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்தாரிடமிருந்து பெறப்பட்டு உபயோகபடுத்தப்பட்டுள்ளது.**

**அதற்கான பட்டியல் தொகை ரூ.**3,07,420/– **ஐ மேற்காணும் நிறுவனத்திற்கு வ ங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**
**அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்..**1337/2021/**பி**2)

**தீர்மான எண் : 199 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–23:</u>**

**இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ஜனவரி, பிப்ரவரி மார்ச்** 2023 **முடிய உள்ள காலங்களுக்கு கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**3.00 **இலட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**
**அலுவலகக்குறிப்பு** :– **பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்..**1337/2021/**பி**2)

**தீர்மான எண் : 200 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–24:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான சிறைக்காடு உரக்கிடங்கில் திடக்கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு, ஜெயின்டோசர் இயந்திரம் மூலம் சமப்படுத்த 12.10.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழேகண்டுள்ளவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விபரம் நிறுவனத்தின் பெயர் | பணி விவரம் | விலைப்புள்ளி விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஒரு மணி நேரத்திற்கு | ஒரு நாள் படி | சாப்பாடு | மொத்தம் |
| 1 | ரத்னா ஏஜென்சி கோயமுத்தூர் | ஜெயின் டோசர் மூலம் திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல் | 2000 | 800 | 100 | 2900/- |
| 2 | இசையா அசோசியேட்ஸ் வத்தலக்குண்டு | | 1400 | 700 | 100 | 2200/- |

**அலுவலகக்குறிப்பு** :-

1)வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் வத்தலக்குண்டு விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2)பொது சுகாதார , அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும், மன்றம்

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2229 / 2022 / எச்1 )
**தீர்மான எண் : 201 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–25:**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகன எண்கள் டிஎன்-60 எ.டபுள்யு 6015, டிஎண்-60 எ.டபுள்யு 6019, டிஎன் -60 எ.டபுள்யு 0522 டாடா ஏஸ் வாகனங்களின் டயர்கள் மிகவும் பழுதடைந்து இயக்கமுடியாத சூழ்நிலையில் உள்ளதால் பொது சுகாதார பணிகள் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி 18.10.2022 தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விபரம் | விஸ்வாக் டயர்ஸ் போடி | ஸ்ரீ ராம் ஆட்டோ ஸ்டோர் - போடிநாயக்கனூர் |
|---|---|---|---|
| 1 | 1)டிஎன் -60 எ.டபுள்யு 6015, 2)டிஎன் -60 எ.டபுள்யு 6019, 3)டிஎன் -60 எ.டபுள்யு 0522 டாடா ஏஸ் மூன்று வாகனத்திற்கு புதிய 1 டயர் விலை | ரூ.3650/- | ரூ.3750/- |

**அலுவலகக்குறிப்பு** :

1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விஸ்வாக் டயர்ஸ் போடி விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2483/2022/எச்1)
**தீர்மான எண் : 202 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–26:**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் டிஎன் 60 எஸ் 1992 வாகனத்திற்கு மராமத்து பணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு 17.10.2022-ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1 | திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல், நகராட்சி எதிர்புறம். கம்பம். | 94,950/- |
| 2 | திரு எஸ்.முருகன், ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், கம்பம். | 95,850/- |
| 3 | திரு.எஸ்.பரமசிவம்., இலட்சுமி ஆட்டோ கேரேஜ் கம்பம். | 96,350/- |

**அலுவலகக்குறிப்பு**:

1)வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகதார அவசர, அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2090-1/2022/எச்1)

**தீர்மான எண் : 203 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–27:**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016 –ன் கீழ் திருத்திய சேவைக்கட்டணம் வசூல் செய்ய உத்தேசிருப்பதை பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்க கோரி இரண்டு நாளிதழ்களில் சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு வரப்பெற்ற விளம்பர கட்டணம் கீழ்காணும் பட்டியலின் படி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(1) மதுரைமணி = ரூ 7350/–
(2) மாலைத்தமிழகம் = ரூ 11088/–

===========

மொத்தம் = ரூ18438/–

===========

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 924 / 2017 / எச்1)**

**தீர்மான எண் : 204 –** அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–28:**

இந்நகராட்சி பகுதியில் உள்ள வீதிகளில் சாக்கடை ஓடை அடைப்புகளை நீக்கம் செய்திடவும் அடைப்புகளை எடுத்திடவும் 1 ஜேசிபி 2 டிராக்டர் வாகனங்களை வாடகை அடிப்படையில் ஒரு வார காலம் எடுத்து பயன்படுத்திடும் பணிக்காக 14.11.2022 ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன விபரம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜென்சிஸ் கோயம்புத்தூர் |
|---|---|---|---|
| 1 | ஜேசிபி இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு + ஒரு நாள் படி | ரூ.800 + 500 | ரூ.1000+ 600 |
| 2 | 2 டிராக்டர் ஒரு நாளைக்கு+ ஒரு நாள் படி | ரூ.4600 + 600 | ரூ5400 + 600 |

**அலுவலகக்குறிப்பு :**

1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் , பழைய வத்தலகுண்டு நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார , அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்: 2861/2022/எச்1)**

**தீர்மான எண் : 205 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–29:</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு ,பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பீளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்புத்தூள், பினாயில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கொள்முதல் செய்ய 11.11.2022 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விபரம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜென்சிஸ் கோயமுத்தூர் |
|---|---|---|---|
| 1 | பீளிச்சிங் பவுடர் கிலோ ஒன்றின் விலை | ரூ.40/- + (ஜிஎஸ்டி -18சதவீதம்) | ரூ.45/- + (-ஜிஎஸ்டி 18 |

| | | | |
|---|---|---|---|
| | + ஜிஎஸ்டி | | சதவீதம்) |
| 2 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் கிலோ ஒன்றின் விலை + ஜிஎஸ்டி | ரூ.8/- + (ஜிஎஸ்டி -5 சதவீதம்) | ரூ.10/- + (ஜிஎஸ்டி -5 சதவீதம்) |
| 3 | பினாயில் லிட்டர் ஒன்றின் விலை + ஜிஎஸ்டி | ரூ.120/- + (ஜிஎஸ்டி- 18 சதவீதம்) | ரூ.140/- + (ஜிஎஸ்டி - 18 சதவீதம்) |

**அலுவலகக்குறிப்பு**:

பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் , பழைய வத்தலகுண்டு நிறுவனத்திற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்: 2917/2022/எச்1)**

**தீர்மான எண் : 206 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–30:**

இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் மற்றும் தூய்மை நகரங்களுக்கான பொதுமக்கள் இயக்கத்தின் கிழ் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது இந்நிகழ்ச்சிகளுக்கு தேவையான மைக் செட் வீடியோ, புரோஜக்டர் போன்றவை தற்சமயம் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் அதற்காக ஆகும் செலவினங்களின் தொகை கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக கீழ்காணும் சாதனங்கள் கொள்முதல் செய்து பயன்படுத்த மன்ற அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ1.00 /- இலட்சம் நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1) மைக்குடன் கூடிய ஸ்பீக்கர்-1
2) வீடியோ புரோஜெக்டர் எல்இடி-1
3) வீடியோஸ்கிரின்-1

**அலுவலகக்குறிப்பு**. .மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 3707/2022/எச்1)

**தீர்மான எண் : 207 –** அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–31:**

இந்நகராட்சிக்கு பொதுசுகாதார பிரிவில் சுகாதார பணிகளை மேற்கொள்வதற்கு தினமும் பேட்டரி ஆப்ரேட்டர் வெகிக்கிள் (BATTARY OPERATOR VEHICLE) இயக்கப்பட்டு வருகிறது. இவ்வாகனங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் குப்பை

கழிவுகளை தரம் பிரித்து வாங்கி அதனை (MCC) எம்சிசி க்கு கொண்டு சென்று உரம் தயாரிப்பதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி ஏற்கனவே 10 எண்ணம் பிஓவி வாகனங்கள் பழுதுபார்ப்பு முடிவடைந்துவிட்டதால் மீதமுள்ள 10 எண்ணம் பிஓவி வாகனங்களுக்கு பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.6,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்: 2586/ 2022 / எச்1)**

**தீர்மான எண் : 208 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–32:</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கீழ்கண்ட வாகனங்களின் வாகன காப்பீட்டு உரிமம் 27.12.2022 உடன் முடிவடைவதால் நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடெட், போடி நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு வாகன காப்பீட்டு உரிமம் நீட்டித்து கொள்ள கேட்பு வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன விபரம் | வாகன காப்பீட்டு உரிமத்திற்கான தொகை |
|---|---|---|
| 1 | JCB **வாகனம்**-TN.60 AX 4410 | ரூ.25,379/. |
| 2 | TATA ACE TN.60 AV 0522 | ரூ.20,325/. |

**அலுவலகக்குறிப்பு**: மேற்காணும் வாகனங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு வாகன காப்பீட்டு உரிமம் நீட்டித்து கொள்ளவும், அதற்கான செலவினத்தொகை ரூ.45,704/. னை நேஷனல் இன்சூரன்ஸ் கோ லிமிடெட், போடி நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2275/2020/எச்2**

**தீர்மான எண் : 209 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–33:</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளில் சேகரமாகும் கழிவுகளை பல்வேறு வகையாகப் பிரித்து வழங்கிட தூய்மை பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி தற்சமயம் பேப்பர், அட்டை துணி, கண்ணாடி, செருப்பு ,பிளாஸ்டிக் போன்ற பல வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு கழிவுகளைப் பிரித்து வண்டிகளில் சேகரிக்க போதுமான எண்ணிக்கையில் குப்பைப்பெட்டிகள் (BIN) இல்லாததாலும் , ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் பெட்டிகள் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் நாள்தோறும் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டு கழிவுகளை,

கழிவுகள் சேகரிக்கும் வண்டிகளில் சேகரிக்க இயலததால் , கழிவுகளைப்பிரித்து சேகரிப்பதில் தொய்வு நிலை ஏற்படுகிறது.எனவே திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் உலர் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்திட அவைகளை முறையாக பல வகைகளாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் கருதி ஒரு பொது சுகாதாரப் பிரிவிற்கு 40 குப்பை சேகரிக்கும் பெட்டிகள் வீதம் 200 பெட்டிகள் வாங்கிடவும் , இதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ 3.00/- இலட்சத்தினை செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 2932 / 2022 / **எச்**1 )

**தீர்மான எண் : 210 –** அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–34:</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் வீடு வீடாக சேகரம் செய்யப்படும் கழிவுகளை பெற பயன்படுத்தப்படும் முதல் நிலை வாகனங்களில் வைப்பதற்கான 200 குப்பை பெட்டிகள் வாங்குவதற்கு11.11.2022 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | பொருள் விபரம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜென்சிஸ் கோயம்புத்தூர் |
|---|---|---|---|
| 1 | குப்பை பெட்டிகள் ஒன்றிக்கு | ரூ.1265 + (ஜீஎஸ்டி18ரூ) | ரூ.1300+ (ஜீஎஸ்டி18ரூ |

**அலுவலகக்குறிப்பு** :

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் , பழைய வத்தலகுண்டு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார ,அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன்அனுமதி பெற்று , வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்: 2932 / 2022 / எச்1 )**

**தீர்மான எண் : 211 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–35:</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவு பொதுசுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பிஓவி(பேட்டரி ஆப்ரேட்டர் வெகிக்கில்) யில் ஏற்பட்டுள்ள

பழுதுகளை நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 10 எண்ணம் பிஓவி(பேட்டரி ஆப்ரேட்டர் வெகிக்கில்) க்களை சரிசெய்வதற்கு 15.12.2022 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **பழுது வாகனங்களின் எண்ணிக்கை** | **யுனாஸ் ஈரிக்சா தாராபுரம்** (Unas ERickshaw) | **ஜெயம் எக்கியுப்மென்ட் இன்ஜினியரிங் தாராபுரம்(Jeyam Equpments and engineering dharapuram)** |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 10 எண்ணம் எண்ணம் பிஓவி(பேட்டரி ஆப்ரேட்டர் வெகிக்கில்) ) - இல் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணி மொத்தம் 10 எண்ணம் | எண்ணம் ஒன்றுக்கு | ரூ 59910/- | ரூ79046/- |

**அலுவலகக்குறிப்பு**:

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானஒப்பந்தப்புள்ளி வழங்கிய யுனாஸ்(Unas ERickshaw) ஈரிக்சா தாராபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார , அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும், மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2586 /2022/எச்1)

**தீர்மான எண் : 212 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–36:</u>**

இந்நகராட்சி தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் தொடர்பாக பிரதி மாதம் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் பொதுமக்கள் மகளிர் சுய உதவிக்குழுவினர் தன்னார்வலர்கள் தொண்டு நிறுவனங்கள் பள்ளி கல்லூரி மாணவர்கள் ஆகியோருடன் இணைந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ2.00இலட்சம் நகர்மன்றத்தீர்மானம் எண் 93 நாள் 29.07.2022 படி அனுமதிக்கப்பட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு தொகை

முழுவதுமாக செலவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மேற்கண்ட இயக்க நிகழ்வுகள் ஆண்டு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு கூடுதலாக ரூபாய் ரூ2.00 இலட்சம் ஆகும் இந்த உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1344/2022/எச்1)

**தீர்மான எண் : 213 –** அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–37:**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவுக்கு தேவையான தளவாடசாமன்கள் கொள்முதல் செய்து வழங்கும் பணிக்கு 13.12.2022 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | தளவாடச்சாமன்கள் விபரம் | எண் ணம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜேன்சிஸ் கோயம்புத்தூர் |
|---|---|---|---|---|
| 1 | தெரு கூட்டுமார் கை பிடியுடன் | 100 | ரூ390 + GST 18% (ஒரு எண்ணம்) | ரூ400 + GST 18% (ஒருஎண்ணம்) |
| 2 | குப்பை அள்ள பயன்படும் தட்டு | 100 | ரூ500 + GST 18% (ஒரு எண்ணம்) | ரூ510 + GST 18% (ஒருஎண்ணம்) |
| 3 | கையோடு | 100 | ரூ80 + GST 18% (ஒரு எண்ணம்) | ரூ85 + GST 18% (ஒருஎண்ணம்) |
| 4 | மண் வெட்டி கை பிடியுடன் | 50 | ரூ600 + GST 18% (ஒரு எண்ணம்) | ரூ620 + GST 18% (ஒருஎண்ணம்) |
| 5 | பிக்காஸ் கை பிடியுடன் | 10 | ரூ900 + GST 18% (ஒருஎண்ணம்) | ரூ910 + GST 18% (ஒருஎண்ணம்) |
| 6 | சாக்கடை தள்ளும் | 100 | ரூ480 + GST | ரூ500 + GST 18% |

| | | | | |
|---|---|---|---|---|
| | கரண்டி | | 18% (ஒருஎண்ணம்) | (ஒருஎண்ணம்) |
| 7 | மண் தள்ளும் பிரஸ் | 50 | ரூ380 + GST 18% (ஒருஎண்ணம்) | ரூ440 + GST 18% (ஒருஎண்ணம்) |
| 8 | சிறிய வாளி | 10 | ரூ500 GST 18% (ஒருஎண்ணம்) | ரூ540 + GST 18% (ஒருஎண்ணம்) |

**அலுவலகக்குறிப்பு** : வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய இசையா அசோசியேட்ஸ் , பழைய வத்தலகுண்டு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

( ந.க.எண்: 2918 / 2022 / எச்1 )

**தீர்மான எண் : 214 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–38:</u>**

**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து வ ங்கும் பணிக்கு** 11.11.2022 **ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.**

| வ.எண் | பாதுகாப்பு பொருட்கள் விபரம் | எண்ணம் | இசையா அசோசியேட்ஸ் பழைய வத்தலகுண்டு | ரத்தினா ஏஜேன்சிஸ் கோயம்புத்தூர் |
|---|---|---|---|---|
| 1 | தலைக்கவசம் | 1 | ரூ. 400 /– | ரூ.420 /– |
| 2 | முகவுறை | 1 | ரூ. 4/– | ரூ.6 /– |
| 3 | கையுறை | 1 | ரூ .150/– | ரூ.200 /– |
| 4 | மேல்சட்டை | 1 | ரூ. 400/– | ரூ.500 /– |
| 5 | மழைக்கோட் | 1 | ரூ .1200/– | ரூ.1200/– |
| 6 | காலணிகள் | 1 | ரூ .350/– | ரூ.400/– |

**அலுவலகக்குறிப்பு** :

**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வ ங்கிய இசையா அசோசியேட்ஸ் , ப ய வத்தலகுண்டு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.**

<u>( ந.க.எண்: 2918–1 / 2022 / எச்1)</u>

**தீர்மான எண் : 215 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–39:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் மாடு ,குதிரை,கழுதை ஆகிய கால்நடைகள் மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளான பேருந்து நிலையம் , மார்கெட், பஜார் வீதி மற்றும், மக்கள் அதிகம் வந்து செல்லும் பகுதிகளில் சுற்றி திரிவதால் பொது மக்கள் மற்றும் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் அச்சத்துடனே சென்று வருகிறார்கள். இது குறித்து பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. மேற்படி கால்நடை வளர்த்து வரும் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு செய்து விட்டு கால்நடைகளை பிடித்து அப்புறப்படுத்தவும் கால்நடைகளை பிடிக்கக்கூடிய செலவு, வாகன ஏற்பாடு, மைக் விளம்பரம், மாடு பிடிப்பவர்களுக்கு ஊதியம் உட்பட பணிகள் மேற்கொள்ள, உத்தேச செலவினம் ரூ75000/- ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3109 / 2022 / எச்1)

**தீர்மான எண் : 216 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்–40:**

போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு வெளிப்புற கொசுப்புகை பணிக்கு(Outdoor Fogging) பயன்படுத்தப்படும் டெக்னிக்கல் மாலத்தியான் மருந்து 200 லிட்டர் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ1.15 இலட்சம் , மற்றும் சாக்கடையில் உள்ள கொசுப்புழுக்களை கட்டுப்படுத்த பயன்படுத்தி வரும் BT Solution மருந்து 300லிட்டர் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ3.95/– இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதி இக்கொள்முதல் பணிக்கு நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 21.12.2022 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணம் | MURUGAN & CO NASIYANUR (PO) | RJ ENTERPRISES KMR NAGAR ELUVAMALAI |
|---|---|---|---|---|
| 1 | டெக்னிக்கல் மாலத்தியான் | 200 லிட்டர் | ரூ551 /– ஒரு லிட்டருக்கு | ரூ668/– ஒரு லிட்டருக்கு |
| 2 | BT SOLUTION | 300 லிட்டர் | ரூ 1308/– ஒரு லிட்டருக்கு | ரூ1420/– ஒரு லிட்டருக்கு |

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும்,

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய முருகன் நாச்சியனூர் ஈரோடு நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் ,அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 3384–2 / 2022 / எச்1 )**

**தீர்மான எண் :** 217 – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்–41:**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் முழு வீச்சில் செயல்படுத்தப்பட்டு வருகிறது, டெங்கு ஒழிப்பு பணிக்கு முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் புகை மருந்து கையிறுப்பு மிகக்குறைவாக இருப்பதால் பைரத்திரம் 2 % Extract - 300 லிட்டர் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 /– இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 0123 / 2023 / எச்1)**

**தீர்மான எண் :** 218 – அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்–42:**

இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் தெரு நாய்களினால் பல்வேறு விதமான அசம்பாவிதங்கள் மற்றும் நோய்கள் பரவும் அபாயம் ஏற்படுகிறது என பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனால் 33 வார்டுகளிலும் சுற்றித்திரியும் தெருநாய்க்கள் விபரம் கணக்கீடு செய்யப்பட்டதில் 800 தெரு நாய்களுக்கு மேலாக உள்ளதால். முதல் கட்டமாக நகராட்சியில் சுற்றித்திரியும் 286 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் 325 தெருநாய்களுக்கு வெறிநோய் தடுப்பு ஊசியும் மாஸ் டிரஸ்ட், திருநெல்வேலி நிறுவனம் மூலம் போடப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக மீதமுள்ள தெரு நாய்களுக்கு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பு ஊசி போடும் பணி மாஸ் டிரஸ்ட், திருநெல்வேலி நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ5.00/–இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: **1871 / 2022** / எச்2

**தீர்மான எண் : 219 –** அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்–43:</u>**

போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட குரங்கனி சாலையில் தென்புறத்தில் சர்வே வார்டு.7, பிளாக் எண்.3 நகரளவு எண். 9/5 இல் 2.14 ஏக்கர் (8667 ச.மீ) பரப்பளவு இடத்திற்கு திரு.J.தேவஅற்புதசிங் மற்றும் திரு.ஜேம்ஸ். D.ரிச்சர்ட் ஆகியோர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடிதம் ந.க.எண்.34/2022/தே.மா2, நாள்.25.07.2022 இல் 22 குடியிருப்பு மனைகொண்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ(தே.மா) எண்.45/2022 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்.45/2022 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி அடிப்படை வசதிகளுக்குரிய சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு ஆகியவற்றை அமைத்துள்ளதற்கு மூன்றாம் தரப்பினர் பொறியியல் கல்லூரி மூலம் சான்று வழங்கியுள்ளார்கள். மேலும் 5 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளுக்கான ஏக்கருக்கு 1.00 இலட்சம் என கணக்கிடப்பட்டு ரூ.3.00 இலட்சம் வைப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது.

மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது 25.07.2022ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் இடம் ஆகியவற்றினை நகராட்சிக்கு (ஆணையர், போடிநாயக்கனூர் நகராட்சி ) தானப்பத்திரம் எண்.3086/2022 நாள்.20.05.2022இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகர் ஊரமைப்பு துறை மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசு மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்தியுள்ளார்கள். எனவே மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.3773/2021/எப்1

**தீர்மான எண் : 220 –** மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டி.பி.2, நாள். 20.10.2022இன்படி பராமரிப்பு பணிகளுக்குக்கான வைப்புத்தொகையாக 5 ஆண்டுகள்

பராமரிப்பு பணிகளுக்கான ஏக்கருக்கு 1.00 இலட்சம் வீதம் என கணக்கிடப்பட்டு ரூ.3.00 இலட்சம் வைப்பு தொகையாக செலுத்தப்படவேண்டும்.

மேலும், மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவுக்கு அரசு மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்திய பின்னரே, இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது என திருத்தி வாசிக்கப்பட்டது, மன்றத்தால் பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்–44:</u>**

போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட குரங்கனி சாலையில் தென்புறத்தில் சர்வே வார்டு.7, பிளாக் எண்.3 நகரளவு எண். 9/6 இல் 2.12 ஏக்கர் (8616.40 ச.மீ) பரப்பளவு இடத்திற்கு திரு. T.D.பத்மநாபன் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடித ந.க.எண். THENI/MEV49GNC/2022/TCP நாள்.07.12.2022 இல் 35 குடியிருப்பு மனைகொண்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு I.P/AD DTCP(TD) NO: SWP/87/2022 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண். SWP/87/2022 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி அடிப்படை வசதிகளுக்குரிய சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு ஆகியவற்றை அமைத்துள்ளதற்கு மூன்றாம் தரப்பினர் பொறியியல் கல்லூரி மூலம் சான்று வழங்கியுள்ளார்கள். மேலும் 5 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளுக்கான ஏக்கருக்கு 1.00 இலட்சம் என கணக்கிடப்பட்டு ரூ.3.00 இலட்சம் வைப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது.

மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது நாள். 07.12.2022ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் இடம் ஆகியவற்றினை நகராட்சிக்கு (ஆணையர், போடிநாயக்கனூர் நகராட்சி ) தானப்பத்திரம் எண்.7344/2022 நாள்.02.12.2022இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகர் ஊரமைப்பு துறை மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசு மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்தியுள்ளார்கள். எனவே மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை

ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.3866/2022/எப்1

**தீர்மான எண் : 221 –** மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டி.பி.2, நாள். 20.10.2022இன்படி பராமரிப்பு பணிகளுக்குக்கான வைப்புத்தொகையாக 5 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளுக்கான ஏக்கருக்கு 1.00 இலட்சம் வீதம் என கணக்கிடப்பட்டு ரூ.3.00 இலட்சம் வைப்பு தொகையாக செலுத்தப்படவேண்டும்.

மேலும், மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவுக்கு அரசு மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்திய பின்னரே, இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது என திருத்தி வாசிக்கப்பட்டது, மன்றத்தால் பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்–45:</u>**

போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட குரங்கனி சாலையில் தென்புறத்தில் சர்வே வார்டு.7, பிளாக் எண்.3 நகரளவு எண். 9/7 மற்றும் 10/2இல் 2.10 ஏக்கர் (8505 ச.மீ) பரப்பளவு இடத்திற்கு திருமதி. .S.மனோரஞ்சிதம் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடிதம் ந.க.எண்.626/2022/தே.மா2, நாள்.18.08.2022 இல் 30 குடியிருப்பு மனைகொண்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ..இ(தே.மா) எண்.48/2022 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்.48/2022 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதியில் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி அடிப்படை வசதிகளுக்குரிய சாலை அமைப்பு, மழைநீர் வடிகால், தெருவிளக்கு ஆகியவற்றை அமைத்துள்ளதற்கு மூன்றாம் தரப்பினர் பொறியியல் கல்லூரி மூலம் சான்று வழங்கியுள்ளார்கள். மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டி.பி.2, நாள். 20.10.2022இன்படி பராமரிப்பு பணிகளுக்குக்கான வைப்புத்தொகையாக 5 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளுக்கான ஏக்கருக்கு 1.00 இலட்சம் வீதம் என கணக்கிடப்பட்டு ரூ.3.00 இலட்சம் வைப்பு தொகையாக செலுத்தப்படவேண்டும்.

மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது 18.08.2022ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் இடம் ஆகியவற்றினை நகராட்சிக்கு (ஆணையர், போடிநாயக்கனூர் நகராட்சி )

தானப்பத்திரம் எண்.4576/2022 நாள்.21.07.2022இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகர் ஊரமைப்பு துறை மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவுக்கு அரசு மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்திய பின்னரே, இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.0047/2022/எப்1

**தீர்மான எண் : 222 –** மன்றத்தால் பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்–46:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் மூலதன மான்ய நிதியின் (Capital Grant Fund) 2021-22ன் கீழ், வார்டு எண்.2, மயானகரை ரஸ்தாவில் அமைந்துள்ள 12.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continious Effluent Monotring System) அளவுமானியினை நிறுவும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ. 1.00/– இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 0769/2022/இ1)**

**தீர்மான எண் : 223 –** அனுமதிக்கப்பட்டது

## <u>பொருள் எண்–47:</u>

**15**வது நிதிக்குழு மான்யம் (Untied) 2021-22ன் கீழ் நகராட்சி பகுதியில் விடுபட்ட பகுதிகளில் புதிய மின்விளக்கு (LED) அமைக்கும் பணிக்கு **28.12.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

**1.** M/s .Maruthi Trading Corporation, Theni

2. M/s .P& B Enterprices, Erode

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்பட்டியலை **05.01.2023**ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கூடுதல் / குறைவு |
| 1 | Providing street lights in the omitted /added area and maintain the streetlight system | ரூ.54,29,000/– | M/s .Maruthi Trading Corporation, Theni | 4.95% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | M/s .P& B Enterprices, Erode | 8.00% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள M/s.Maruthi Trading Corporation, Theni நிறுவனத்தின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு **06.01.2023**ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் மதிப்பீட்டின் விலை விகிதத்தை விட **0.01%** குறைத்து தர சம்மதம் கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள M/s .Maruthi Trading Corporation, Theni நிறுவனத்தின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு **06.01.2023**ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் மதிப்பீட்டின் விலை விகிதத்தை விட **0.01%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

ந.க.எண்.**3021/2022/இ1**

**தீர்மான எண் :** 224 – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்–48:</u>**

State Urban Infrastructure Development Fund 2022-23ன் கீழ் நகராட்சி பகுதியில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு **28.12.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

**1.** M/s .Maruthi Trading Corporation, Theni

2. M/s .P& B Enterprices, Erode

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியான இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளின்

விலைப்பட்டியலை **05.01.2023**ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Conversion of Street Lights into Energy efficient LED Lights - 2626 Nos | ரூ.244.01/– (இலட்சம்) | M/s .Maruthi Trading Corporation, Theni | 4.81% மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | M/s .P& B Enterprices, Erode | 12.15% மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள M/s.Maruthi Trading Corporation, Theni நிறுவனத்தின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு **06.01.2023**ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் மதிப்பீட்டின் விலை விகிதத்தை விட **0.01%** குறைத்து தர சம்மதம் கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள M/s .Maruthi Trading Corporation, Theni நிறுவனத்தின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு **06.01.2023**ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் மதிப்பீட்டின் விலை விகிதத்தை விட **0.01%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

ந.க.எண்.**2855/2021/இ1**

**தீர்மான எண் :** 225 – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்–49:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–22, புதுதெருவில் புதிதாக கட்டியுள்ள 40 எண்ணம் கடைகளுக்கான மின்இணைப்புகளுக்கு கூடுதல் மின்பாதை (Over load) காரணமாக, புதிதாக மின்கம்பம் மற்றும் மின்மாற்றி அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சாரவாரியம் மூலம் வரப்பெற்ற மதிப்பீட்டு தொகை ரூ.3,90,748/–னை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று

தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2353 /2022/இ1)**

**தீர்மான எண் : 226 –** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்(கூ.பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி